Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**
தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556
நடுநிலை நாளிதழ்
DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை
☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,
நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 040 | ஞாயிற்றுக்கிழமை Sunday | 10.05.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# மேற்கு வங்காள முதல்மந்திரியாக பதவியேற்றார் சுவேந்து அதிகாரி
## பிரதமர் நரேந்திர மோடி, அமித் ஷா பங்கேற்பு



மேற்கு வங்காள மாநிலத்தில் நடந்த தேர்தலில் பாஜக அமோக வெற்றிபெற்றுள்ளது. கடந்த பதினைந்து வருடங்களாக அங்கு ஆட்சியில் இருந்த திரிணாமுல் காங்கிரஸ் கட்சி தோல்வியை சந்தித்தது. இதையடுத்து பாஜகவின் சட்டமன்ற குழு தலைவராக சுவேந்து அதிகாரி அக்கட்சியின் எம்.எல்.ஏக்களால் தேர்வுசெய்யப்பட்டார். இதையடுத்து கவர்னர் ஆர்.என். ரவியை சந்தித்து ஆட்சி அமைக்க சுவேந்து அதிகாரி உரிமை கோரினார். பின்னர் ஆட்சி அமைக்க கவர்னர் அழைப்பு விடுத்த நிலையில், இன்று மாநிலத்தின் புதிய முதல் மந்திரியாக சுவேந்து அதிகாரி பதவியேற்றார்.

முன்னதாக பவானிபூர் தொகுதியில் போட்டியிட்ட மம்தா பானர்ஜி, பா.ஜ.க. மூத்த தலைவர் சுவேந்து அதிகாரியிடம் தோல்வி அடைந்தார். முதல்முறையாக ஆட்சியை பா.ஜ.க. அங்கு கைப்பற்றி உள்ளது. இந்த சூழலில் புதிய முதல்-மந்திரியை தேர்ந்தெடுப்பதற்காக, புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட பா.ஜ.க. எம்.எல்.ஏ.க்கள் கூட்டம் கொல்கத்தாவில் நடந்தது. மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா முன்னிலையில் இக்கூட்டம் நடந்தது.

அதில், சட்டசபை பா.ஜ.க.கட்சி தலைவராக (முதல்-மந்திரி) சுவேந்து அதிகாரி ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார். இதை அமித்ஷா அதிகாரப்பூர்வமாக அறிவித்தார்.

இந்நிலையில் சுவேந்து அதிகாரி தலைமையிலான அரசு (சனிக்கிழமை) பதவியேற்றது. கொல்கத்தாவில் உள்ள படைவீரர் அணிவகுப்பு மைதானத்தில் இந்த விழா நடைபெற்றது.

சுவேந்து அதிகாரி மற்றும் புதிய மந்திரிகளுக்கு கவர்னர் ஆர்.என். ரவி பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். பிரதமர் மோடி, அமித்ஷா, பா.ஜ.க. ஆளும் மாநிலங்களின் முதல்-மந்திரிகள் கலந்து கொண்டு அவருக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

மேலும் மத்திய மந்திரிகள் ராஜ்நாத் சிங், ஜே.பி. நட்டா மற்றும் தர்மேந்திர பிரதான் ஆகியோருடன் திரிபுரா முதல்-மந்திரி மாணிக் சாஹா மற்றும் அசாம் முதல்-மந்திரி ஹிமந்தா பிஸ்வா சர்மா, டெல்லி முதல்-மந்திரி ரேகா குப்தா மற்றும் உத்தரகாண்ட் முதல்-மந்திரி புஷ்கர் தாமி ஆகியோரும் இந்தப் பதவியேற்பு விழாவில் கலந்துகொண்டனர்.

பிரதமர் உள்ளிட்ட மிக முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்ட நிலையில், கொல்கத்தாவில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளும், பல அடுக்கு பாதுகாப்புகளும் செய்யப்பட்டிருந்தன.

இதனிடையே நிகழ்ச்சியின்போது பா.ஜ.க.வின் மிக மூத்த தொண்டர்களில் ஒருவரான 98 வயது மதிக்கத்தக்க மன்னலால் சர்க்காரின் கால்களில் விழுந்து பிரதமர் மோடி ஆசிபெற்றார். இதன் காட்சிகள் இணையத்தில் வைரலான நிலையில், யார் இந்த மன்னலால் சர்க்கார் என்ற கேள்வி பலருக்கும் எழுந்தது.

98 வயதான மன்னலால் சர்க்கார், சுதந்திரத்திற்கு பிந்தைய இந்தியாவில் தேசியவாத இயக்கத்துடன் தொடர்புடைய ஆரம்பகால அடிமட்டத் தலைவர்களில் ஒருவராக இருந்தவர். 1952-ல், இந்திய மூவர்ணக் கொடியை ஏற்றும் இயக்கத்தின் போது காஷ்மீரில் கைது செய்யப்பட்டவர்களில் ஒருவராவார் இவர்.

இதுதொடர்பாக பிரதமர் மோடி தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:-

மேற்கு வங்காளத்தில் முதல் பா.ஜ.க. அரசு பதவியேற்கும் வேளையில், டாக்டர் ஷ்யாமா பிரசாத் முகர்ஜியையும், தேசத்திற்கும் குறிப்பாக மேற்கு வங்காளத்திற்கும் அவர் ஆற்றிய அழியாத பங்களிப்பையும் நாம் அனைவரும் நினைவுகூர்வது இயல்பானது. அவரது தொலைநோக்குப் பார்வையை நிறைவேற்ற எந்த முயற்சியும் கைவிடப்படாது.

கொல்கத்தாவில் நடந்த பதவியேற்பு விழாவின் போது, மன்னலால் சர்க்கார் ஜி யை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. ஒரு தீவிர தேசபக்தரான அவர், டாக்டர் முகர்ஜியுடன் இணைந்து பணியாற்றினார். அவருடன் சென்றபோது ஜம்மு காஷ்மீரில் கைது செய்யப்பட்டார். அவர் தனது வாழ்நாளை நமது கட்சிக்காக அர்ப்பணித்து, மேற்கு வங்காளம் முழுவதும் அதன் அடித்தளத்தை விரிவுபடுத்தி, அனைத்து தரப்பு மக்களையும் கட்சியில் சேர தூண்டினார். மக்களிடையே பணியாற்றி, நமது கட்சியை வலுப்படுத்திய இத்தகைய ஊக்கமளிக்கும் ஆளுமைகள் நம்மிடம் இருப்பதில் பா.ஜ.க.வில் உள்ள நாங்கள் பெருமிதம் கொள்கிறோம்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "தமிழகத்தில் ஆட்சி அமைக்கும் கட்சிக்கு வாழ்த்துகள்" எடப்பாடி பழனிசாமி பேச்சு

சென்னை: 'தமிழகத்தில் ஆட்சி அமைக்கும் கட்சிக்கு எனது மனமார்ந்த நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்' என்று அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், "நடைபெற்று முடிந்த 17-வது தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தேர்தலில் பல்வேறு கட்சிகள் சார்பில் வேட்பாளர்கள் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளனர். தமிழ்நாட்டில் ஆட்சி அமைக்கும் கட்சிக்கு எனது மனமார்ந்த நல்வாழ்த்து களை தெரிவித்துக் கொள்கிறேன்" என்று கூறியுள்ளார். தமிழகத்தில் பரபரப்பான அரசியல் சூழல் நீடிக்கும் நிலையில், பழனிசாமியின் இந்தப் பதிவு ஒரு 'சிக்னல்' ஆக கருதப்படுகிறது.



முன்னதாக, தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் 108 இடங்களைக் கைப்பற்றிய தவெக, தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்தது. எனினும், ஆட்சி அமைக்க 118 எம்எல்ஏக்களின் ஆதரவுதேவைப்படும் நிலையில், முதலில் 5 எம்எல்ஏக்கள் கொண்ட காங்கிரஸ் கட்சி, திமுக கூட்டணியில் இருந்து விலகி தவெகவுக்கு ஆதரவு தெரிவித்தது. 2 தொகுதிகளில் போட்டியிட்டுள்ள விஜய், ஒரு தொகுதியை ராஜினாமா செய்யவேண்டிய நிலையில், காங்கிரஸ் ஆதரவு மூலம் தவெக பலம் 112 ஆக உயர்ந்தது.

இதையடுத்து, ஆட்சி அமைக்க உரிமை கோரி ஆளுநர் அர்லேகரை சந்தித்து, விஜய் கடிதம் வழங்கினார். ஆனால், 'ஆட்சி அமைக்கத் தேவையான 118 உறுப்பினர்களின் பட்டியலை சமர்ப்பித்தால் மட்டுமே அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும்' என்று ஆளுநர் உறுதிபடத்தெரிவித்தார். பெரும்பான்மைக்கு 118 எம்எல்ஏக்களின் ஆதரவு தேவைப்படும் நிலையில், திமுக கூட்டணியில் அங்கம் வகிக்கும் இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், விசிக, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் (ஐயூஎம்எல்) ஆகிய கட்சிகளின் தலைவர்களை தவெக நிர்வாகிகள் சந்தித்து ஆதரவு கோரினர்.

இதன் தொடர்ச்சியாக, தவெகவுக்கு ஆதரவு அளிப்பது தொடர்பாக தீவிரமாக ஆலோசித்து வந்த இடதுசாரி கட்சிகள், இறுதியில் தவெகவுக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்குவதாக நேற்று அறிவித்தன. இதற்கான அதிகாரப்பூர்வ ஆதரவுக் கடிதத்தை சென்னை தியாகராய நகரில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் சிடிஆர். நிர்மல்குமாரிடம் அக்கட்சித் தலைவர்கள் வழங்கினர். இதன்மூலம் தவெக பலம் 116 ஆக உயர்ந்தது.

இதற்கிடையே ஐயூஎம்எல் கட்சியும் தவெகவுக்கு ஆதரவு அளித்துள்ளதாக தகவல் வெளியான நிலையில் அக்கட்சி இதற்கு மறுப்பு தெரிவித்தது. அதேபோல், விசிக தலைவர் திருமாவளவனுடனும் தவெகவினர் பேச்சுவார்த்தை நடத்தினர். இதைத் தொடர்ந்து, இடதுசாரி தலைவர்கள் மற்றும் திமுக தலைவர் ஸ்டாலினுடன் திருமாவளவன் ஆலோசனை நடத்தியதாகவும் தகவல் வெளியானது. இந்நிலையில், தவெகவுக்கு ஆதரவு அளிப்பது தொடர்பான தனது முடிவை தெரிவிக்கவுள்ளார் திருமாவளவன். முன்னதாக, நேற்று மாலை 7 மணி அளவில் ஆளுநர்மாளிகைசென்ற விஜய், ஆளுநர் அர்லேகரை 3-வது முறையாக சந்தித்து, எம்எல்ஏக்களின் ஆதரவுக் கடிதங்களை வழங்கினார். அதன்பின்னர், தியாகராய நகரில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளின் அலுவலகங்களுக்கு சென்ற விஜய், அங்கு அக்கட்சிகளின் தலைவர்களை சந்தித்து நன்றி தெரிவித்தார். தவெகவுக்கு பெரும்பான்மைக்கான 118 இடங்கள் கிடைக்காத நிலையில், ஆட்சி அமைப்பது தொடர்பாக ஆளுநரிடம் இருந்து அழைப்பு விடுக்கப்படவில்லை. அதன் பிறகு, தவெகவுக்கு பெரும்பான்மைக்கான 118 எம்எல்ஏக்களின் ஆதரவு உறுதி செய்யப்பட்ட பிறகே, ஆளுநரிடம் இருந்து அழைப்பு வரும் என்று தெரிகிறது.

திமுக ஆதரவுடன் அதிமுக ஆட்சி அமைப்பதற்கான காய்நகர்த்தல்களை எடப்பாடி பழனிசாமி உள்ளிட்டோர் மேற்கொண்டு வந்ததாக தகவல்கள் பரவி வந்தன. இப்பின்னணியில் புதிதாகஅமையவுள்ள ஆட்சிக்கு எடப்பாடி பழனிசாமிவாழ்த்துதெரிவித்துள்ளது முக்கியத்துவம் பெற்றுள்ளது.

**வரி விளம்பரங்கள்**

தினத்தளம்
DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் |
| நினைவு நாள் | ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் |
| நகைக்கடன் | வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் |

தொடர்புக்கு : ☎ +919444082959

# முப்படைகளின் தலைமைத் தளபதியாக என்.எஸ்.ராஜா சுப்ரமணி நியமனம்

நாட்டின் பாதுகாப்பை மேலும் பலப்படுத்தவும், போர்க்காலங்களில் ராணுவம், கடற்படை, விமானப்படை என முப்படைகளையும் ஒரு குடையின் கீழ் கொண்டுவந்து ஒருங்கிணைப்பதற்காக உருவாக்கப்பட்ட பதவிதான், முப்படை தலைமைதளபதி ஆகும்.

முதல் முப்படை தலைமை தளபதியாக ஜெனரல் பிபின் ராவத் இருந்தார் (2020 – 2021). இவர் துரதிருஷ்டவசமாக 2021ஆம் டிசம்பரில் ஹெலிகாப்டர் விபத்தில் உயிரிழந்தார். அடுத்து 2வது முப்படைதலைமை தளபதியாக 2022ஆம் ஆண்டு செப்டம்பர் 30ஆம் தேதி அன்று ஜெனரல் அனில் சவுகான் பொறுப்பேற்றார். இவரது பதவிக்காலம் வருகிற 30-ம் தேதி அன்றுநிறைவடைகிறது.



இந்த நிலையில், நாட்டின் 3வது முப்படைகளின் தலைமைத் தளபதியாக என்.எஸ்.ராஜா சுப்ரமணி என்பவரை மத்திய அரசு நியமனம் செய்துள்ளது. ஓய்வு பெற்ற லெப்டினன்ட் ஜெனரல் என்.எஸ்.ராஜா சுப்ரமணி, நாட்டின் ராணுவ சேவையில் சுமார் 40 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளார். 1985ஆம் ஆண்டில் கார்வால் ரைபிள்ஸ் படையில் அதிகாரியாக பணியாற்றினார். அதற்கு அவர் ராணுவத் துணை தளபதியாக பணியாற்றினார். உத்தர பிரதேச தலைநகர் லக்னோவில் உள்ள மத்திய ராணுவக் கட்டளை தளபதியாகவும் பணியாற்றினார்.

அதேபோல வைஸ் அட்மிரல் கிருஷ்ண சுவாமிநாதன் அடுத்த கடற்படைத் தலைமை தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

டில்லியில் உள்ள தேசிய பாதுகாப்புக் கல்லூரியின் முன்னாள் மாணவர் ஆவார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் பாதுகாப்பு ஆய்வில் எம்.பில் பட்டம் பெற்ற ராஜா சுப்ரமணி, டெல்லி மற்றும் லண்டனில் பயின்றுள்ளார். தேசிய பாதுகாப்பு கல்வி ளர் கல்லூரி, கரஞ்சாவில் உள்ள கடற்படைப்போர்முறைக் கல்லூரி, மற்றும் ரோட் தீவின் நியூபோர்ட்டில் உள்ள அமெரிக்கக் கடற்படைப் போர்க் கல்லூரி ஆகியவற்றின் முன்னாள் மாணவர் ஆவார்.

**செய்திகள்**
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# யார் இந்த ஜெகதீஷ்? விஜய்யின் வெற்றிக்குப் பின்னால் இருக்கும் 'ரூட்' வியூகம்!



திரையுலகில் நடிகராக உச்சம் தொட்ட விஜய், இன்று தமிழக அரசியலில்தனதுதமிழகவெற்றிக் கழகத்தின் மூலம் தவிர்க்க முடியாத சக்தியாக உருவெடுத்துள்ளார். இந்த அபாரமான வளர்ச்சிக்கு பின்னால் திரைமறைவில் இருந்து மூளையாக செயல்பட்டவர்களில் ஒருவர்தான் அவரது மேலாளர் ஜெகதீஷ் பழனிசாமி.

சினிமாவில் கடந்த 10 ஆண்டுகளாக விஜய்யின் பிராண்ட் மதிப்பை உயர்த்தியதில்தொடங்கி, தமிழக வெற்றிக் கழகத்தின் டிஜிட்டல் ராஜ்ஜியம் வரை ஜெகதீஷ் மற்றும் அவரது தி ரூட் நிறுவனம் ஆற்றிய பங்கு தற்போது மற்ற அரசியல் கட்சிகளின் பார்வையை ஒட்டுமொத்தமாகதிருப்பியிருக்கிறது.

தமிழக அரசியல் வரலாற்றில் எம்ஜிஆருக்கு நிகரான ஒரு பிம்பமாக விஜய்யை இன்று கொண்டு வந்து நிறுத்தி இருப்பதற்கு பின்னால் பலகாரணிகள் உள்ளன. அதில் ஜெகதீஷும், அவருடைய சோஷியல் மீடியா குழுவும் மிக முக்கியமான பங்காற்றியதை விவரம் அறிந்த யாரும் மறுக்கமுடியாது.

விஜய்யின் அரசியல் வருகைக்கான அஸ்திவாரம் கடந்த இரு ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கியதல்ல. அது பல ஆண்டுகளுக்கு முன்பே திட்டமிடப்பட்டது. இதற்குப் பின்னால் ஜெகதீஷின் ரூட் நிறுவனம் வெறும் சினிமா மேலாண்மை நிறுவனமாக மட்டுமின்றி, ஒரு மிகப் பெரிய தரவு பகுப்பாய்வு மையமாகவும் செயல்பட்டது.

சமூக வலைதளங்களில் விஜய்யின் ரசிகர்கள் எங்கே இருக்கிறார்கள், அவர்கள் எந்த மாதிரியான செய்திகளைப் பகிர்கிறார்கள், எதற்கெல்லாம் உணர்ச்சிவசப்படுகிறார்கள் என்பதை ரூட் நிறுவனம் மிகத் துல்லியமாக கண்காணித்தது. இதற்காக ஆயிரக்கணக்கான டிஜிட்டல் வல்லுநர்கள் பணியமர்த்தப்பட்டனர். குறிப்பாக, இன்ஸ்டாகிராம் மற்றும் வாட்ஸ்அப் போன்ற தளங்களில் ஜென்ஸீ தலைமுறை இளைஞர்களைக் கவர ஒரு தனித்துவமான அல்காரித வியூகம் வகுக்கப்பட்டது.

சமூக வலைதளங்களில் விஜய்க்கான அல்காரிதம்எவ்வாறு இயங்குகிறது என்பதே ஓர் ஆச்சரியமான விஷயம்.

ஒரு சராசரி இளைஞர் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் விஜய்யின் ஒரு சிறிய வீடியோவையோ அல்லது ஒரு ஹேஷ்டேகையோ பார்த்தால், அடுத்த சில நிமிடங்களில் அவரது பக்கம் முழுவதும் விஜய் தொடர்பான செய்திகளாகவே மாறும் வகையில் அல்காரித நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

இதைச் சாத்தியமாக்க 0 முதல் லட்சக்கணக்கான ஃபாலோயர்களைக் கோண்ட ஆயிரக்கணக்கான 'ஷேடோ ஐடிக்கள்' உருவாக்கப்பட்டன. இவை ஒவ்வொன்றும் விஜய்யின் புகழைப் பாடும் வீடியோக்களையும், அவரது அரசியல் கருத்துகளையும் தொடர்ந்து இணையத்தில் பதிவிட்டுக் கொண்டே இருந்தன. இதன் மூலம், ஒரு செயற்கையான 'டிஜிட்டல் அலை' உருவாக்கப்பட்டது. இதுவும் இன்று சாதாரண பயனாளர்களின் அல்காரிதத்தை ஆக்கிரமித்து, விஜய்யை ஒரு தவிர்க்க முடியாத தலைவராக உருவாக்கியுள்ளது.

இதன் மையப்புள்ளி 'ரூட்' நிறுவனம் நிர்வகிக்கும் ஆயிரக்கணக்கான வாட்ஸ்அப் குழுக்களில்தான் இருக்கிறது. மற்ற அரசியல் கட்சிகள் தேர்தலின்போது மட்டுமே வாட்ஸ்அப்குழுக்களைதொடங்குகின்றன அல்லது ஏற்கெனவே இருக்கும் குழுக்களை வீரியமாக பயன்படுத்துகின்றன. ஆனால் ஜெகதீஷின் குழு, கடந்த ஐந்து ஆண்டுகளாகவே தமிழகத்தின் ஒவ்வொரு ரசிகர் மன்றத்தையும் ஒருங்கிணைத்து வாட்ஸ்அப் குழுக்களை வலுப்படுத்தியது.

இந்தச் சங்கிலித் தொடர் அமைப்பில், ஒரு செய்தி கிளம்பினால், அது அடுத்த ஐந்து நிமிடங்களில் தமிழகத்தின் லட்சக்கணக்கான இளைஞர்களின் கைபேசிக்குச் சென்றடையும் வகையில் ஒரு கட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

ஆரம்பத்தில் விஜய் படங்கள் பற்றியும், சமூக வலைதளங்களுக்கான சினிமா கன்டெண்ட் பற்றியும் மட்டுமே பேசப்படும் இடங்களால வலம் வந்த இந்த வாட்ஸ்அப் குழுக்களில், போகப் போக விஜய்யை ஒரு குடும்ப உறுப்பினர் போன்ற உணர்வை ஏற்படுத்தக்கூடிய தகவல்கள் பகிரப்பட்டன. பின்னாட்களில் விஜய்யின் அரசியல் வருகையை கொண்டாடும் இடங்களாக அவை மாறின.


இது ஒருபுறமென்றால் இன்ஸ்டாகிராம் என்பது இன்றைய இளைஞர்களின் தனி உலகம். அந்த உலகத்தின் மொழியை ஜெகதீஷ் மிகச் சரியாகப் புரிந்து கொண்டார். விஜய் புகழ் பாட, அவரது படங்களில் வரும் மாஸ் வசனங்கள் கொண்ட ரீல்ஸ்களை பகிர்வதற்காக உருவாக்கப்பட்ட லட்சக்கணக்கான இன்ஸ்டா ஐடிக்கள், தமிழக வெற்றிக் கழகம் தொடங்கப்பட்ட பிறகு விஜய்யின் ஒவ்வொரு மேடைப் பேச்சையும் துண்டுதுண்டாகவெட்டி, அதற்கேற்ற பின்னணி இசை மற்றும் சினிமா எடிட்டிங்நுட்பங்களுடன் வெளியிட்டன.

இது அரசியல் ஒவ்வாத இளைஞர்களிடம் கூட ஒரு கவர்ச்சியை ஏற்படுத்தியது. விஜய்யின் அரசியல்ஒருஸ்டைலான விஷயமாகக்காட்டப்பட்டது. இந்த வைரல் அரசியல்முறையும்கூடதவெகவை குறுகிய காலத்தில் ஒரு மாபெரும் சக்தியாக மாற்றியது.

இதன் பின்னணியில் இருந்த ஜெகதீஷின் திட்டமிடல் என்பது, காலம்காலமாக அரசியலில் ஊறிப்போன மற்ற கட்சிகளுக்குப் பெரும் சவாலாக அமைந்தது. மற்ற பெரிய அரசியல் கட்சிகள் சமூக வலைதளங்களை வெறும் அறிக்கை வெளியிடும் இடங்களாக மட்டுமே பயன்படுத்துகின்றன. ஆனால் விஜய்க்காக களமாடும் சமூக வலைதள ஐடிக்கள் இதுபோன்ற விஷயங்களை எப்போதும் சீண்டுவதில்லை.

உதாரணமாக, விஜய்க்கு எதிராக ஒரு விமர்சனம் எழுந்தால், அதைத் தர்க்கரீதியாக அணுகாமல், ஒரு மிகப் பெரிய டிஜிட்டல் தாக்குதல் மூலம் அந்த விமர்சனத்தை அமுக்கிவிடும் முறை பல ஆண்டுகளாக கையாளப்பட்டு வருகிறது. விஜய்க்கு போட்டியாக கருதப்படும் நடிகர்களின் படங்கள் ரிலீஸ் ஆவதற்கு ஒருநாள் முன்பே அந்த படத்தின் பெயருடன் டிசாஸ்டர் என்று சேர்க்கப்பட்ட ஹேஷ்டேக் இந்திய அளவில் ட்ரெண்ட் ஆவது வழக்கம்.

# "தவெகவை ஆதரிக்க திருமாவளவன் தயங்குவது பேரம் பேசுவதாலா?" தமிழிசை கண்டனம்



சென்னை: கம்யூனிஸ்டுகளுடன் ஒட்டுமொத்தமாக முடிவை தெரிவிப்பதாக கூறிவிட்டு திருமாவளவன் தற்போது ஏன் தயங்குகிறார்? என்ன பேரம் பேசிக் கொண்டிருக்கிறார் என பாஜக மூத்த தலைவர் தமிழிசை கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள வீடியோ பதிவில், "தொடர்ந்து மூன்று முறை முழுமையான எண்ணிக்கை இல்லாத காரணத்தினால், விஜய் ஆளுநரை சந்தித்த பிறகும் ஆளுநர் அவரை திருப்பி அனுப்பியிருக்கிறார். நீங்கள் ஆட்சி அமைப்பதற்கான எண்ணிக்கையோடு வாருங்கள், நாங்கள் அனுமதி தருகிறோம் என ஆளுநர் மாளிகை தெளிவாகச் சொல்கிறது. எண்ணிக்கை இல்லாமல் சென்றுவிட்டு, ஆளுநர் மீது பழி போடுவது எந்த விதத்திலும் நியாயமில்லை. இத்தனை மதிப்பெண்கள் வாங்கினால் தான் தேர்வாக முடியும் என்ற தேர்வு இருக்கும்போது, அந்த எண்ணிக்கை இல்லாமலேயேஎன்னைதேர்வு செய்யுங்கள் எனச் சொல்வது தவறு; அது மக்களின் நம்பிக்கையை பெற்றதாக ஆகாது. தனிப்பெரும் கட்சியைஆட்சியமைக்க அழைக்க வேண்டும் எனமுதல்வர்ஸ்டாலின் சொல்லிவிட்டு, அதற்கு பின்னால் இருந்து பல முட்டுக்கட்டைகளை போடுகிறார். ஆக, வெளித்தோற்றத்தில் விஜய்யை ஆதரிப்பதுபோல ஒரு தோற்றத்தை ஏற்படுத்திவிட்டு, எல்லாரும் முட்டுக்கட்டை போடுகிறார்கள்.

கம்யூனிஸ்டுகள் ஆதரவை தெரிவித்துவிட்டு, மத்தியில் இருந்து பாஜக ஆளுநருக்கு அழுத்தம் தருகிறது என சொல்கிறார்கள்; அதிலும் உண்மை இல்லை. திருமாவளவனின் ஆதரவுக்காக காத்திருக்கிறோம் என சொல்கிறார்கள். கம்யூனிஸ்டுகளுடன் ஒட்டுமொத்தமாக முடிவை தெரிவிப்பதாககூறிவிட்டுதிருமா வள வன் தற்போது ஏன் தயங்குகிறார்? என்ன பேரம் பேசிக் கொண்டிருக்கிறார். காங்கிரஸ் ஒட்டுமொத்தமாகதிமுகவிடமிருந்து தனது நட்பை முறித்துக் கொண்டது. இவர்களெல்லாம் அரசியல் சுயலாபத்துக்காக முடிவுகளை எடுத்துவிட்டு ஆளுநர் மீதும், பாஜக மீதும் பழி சொல்வது எந்த விதத்திலும் நியாயம் இல்லை" இவ்வாறு அவர் பேசியுள்ளார்.

இதனிடையே, தனது மற்றொரு எக்ஸ் தளத்தில், "தமிழ்நாட்டில் புதிய ஆட்சி அமைய வேண்டும் என்பதில் அத்தனை பேருக்கும் அக்கறை இருக்கிறது. அந்த ஆட்சி நிலையானதாகவும் இருக்க வேண்டும் என்பதிலும் அக்கறை இருக்கிறது. அதற்கான அடிப்படை நடவடிக்கைகள் தமிழக அரசியலில் நகர்ந்து கொண்டிருக்கிறது என்பதும் உண்மை. மக்களின் தீர்ப்பு மதிக்கப்பட்டு கொண்டிருக்கிறது அதனால் தான் பல வாய்ப்புகள் கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதும் உண்மை. ஆனால் ஆக்கபூர்வமாகவும் உண்மை பூர்வமாகவும் எதிர்கொள்ள வேண்டிய இன்றைய அரசியல் சூழலை...உணர்ச்சிபூர்வமாக பல தொண்டர்கள் நடந்து கொள்வது கவலை அளிக்கக் கூடியதாக இருக்கிறது. விடுதலை சிறுத்தைகள் கட்சி வாசலில் சகோதரர் ஒருவர் பிளேடால் வெட்டிக் கொள்வதும் வள்ளியூரில் ஒருவர் தீக்குளிக்க முயன்று அவர் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதும் கவலையளிக்கக் கூடியதாக இருக்கிறது. உடனடியாக தனது ஆதரவாளர்களுக்கு விஜய் ஒரு செய்தியை வெளியிட வேண்டும் தங்களுக்கு வாக்களித்த மக்களும் ஆதரவாளர்களும் அமைதி காக்க வேண்டும் என்றும் எந்த ஒரு ஆபத்தான முடிவுக்கு வரக்கூடாது என்பதையும் அன்பான வேண்டுகோளாக அளிக்க வேண்டும் கேட்டுக்கொள்கிறேன்" இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# "விஜய் ஆட்சி அமைத்தால் தமிழகத்துக்கே பேரழிவு" டிடிவி தினகரன் காட்டம்



சென்னை: "முதல்வராகி ஊழலை ஒழிப்போம் என்று சொல்பவர்கள், முதல்வராகவே ஃபோர்ஜரி செய்கிறார்கள். ஒருஎம்எல்ஏதானே என மிரட்ட நினைத்திருக்கலாம். குதிரை பேரம் செய்யவே இப்படி செய்திருக்கின்றனர்" எனஅமமுகபொதுச் செயலாளர் டிடிவி தினகரன் தெரிவித்துள்ளார்.

சென்னையின் அவர் இன்று அடையாறில் இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் கூறும்போது, "காமராஜ் கையெழுத்திட்டதாக வெளியான வீடியோ எங்கு எடுக்கப்பட்டது? காமராஜ் கையெழுத்திடுவது போன்ற வீடியோவை எடுத்தது யார்? விஜய்யா, ஆனந்தா, செங்கோட்டையனா? ஏஐ ஆக கூட இருக்கலாம். ஏஐ மூலம் என்ன வேண்டுமானாலும் உருவாக்கலாம். நகல் கடிதத்தை ஆளுநரிடம் கொடுத்தபோது, அசல் கடிதம் எங்கே என அவர் கேட்டிருக்கிறார். அதற்கு தவெகவினர் தருவதாக சொல்லிவிட்டு வந்துவிட்டனர். அது மோசடி வீடியோ என ஆளுநரிடம் கூறிவிட்டோம்.

முதல்வராகி ஊழலை ஒழிப்போம் என்று சொல்பவர்கள், முதல்வராகவே ஃபோர்ஜரி செய்கிறார்கள். தவெகவினர் என்னை மிரட்ட, பயமுறுத்தப் பார்க்கின்றனர். எனது ஒப்புதலுடன் கடிதம் கொடுக்கப்பட்டதாகக் கூறி குழப்பத்தை ஏற்படுத்த பார்க்கின்றனர். என்னை பயமுறுத்தலாம் என பார்க்கின்றனர். எவ்வளவோநெருக்கடிகளைப் பார்த்தவன் நான். போலி ஆதரவு கடிதம் விவகாரத்தை சும்மா விடமாட்டேன். தீயசக்தி எல்லாம் தாண்டி தற்போது தவெக தமிழ்நாட்டுக்கு அழிவு சக்தியாகவந்துநிற்கிறது. தமிழ்நாட்டை அழிக்க வந்த சக்தி. ஆட்சிக்கு வரும் முன்பே திமிராக, அகங்காரமாக ஒரு எல்எல்ஏதானேஎனமோசடி கடிதம் தருகிறார்கள்.

ஒரு எம்எல்ஏ தானே என மிரட்ட நினைத்திருக்கலாம். குதிரை பேரம் செய்யவே இப்படி செய்திருக்கின்றனர். விஜய் ஆட்சி அமைத்தால், அது தமிழகத்துக்கு பேரழிவை ஏற்படுத்தும். ஆட்சி அமைக்கவே இவ்வளவு ஃபோர்ஜரி வேலைகள் செய்கிறார்கள்" என்று தினகரன் கூறினார்.

# தவெகவிடம் விசிக பதவிகள் கேட்கிறதா? ரவிக்குமார் எம்.பி மறுப்பு



சென்னை: தமிழக வெற்றிக் கழகத்திடம் விசிக தரப்பில் இருந்து பதவிகள் கேட்பதாக வெளியான தகவலுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ரவிக்குமார் விளக்கம் அளித்துள்ளார். தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவிட்டுள்ள அவர், "விசிக சார்பில் பதவிகள் கேட்கப்படுவதாகப் பரப்பப்படும் செய்திகள் உண்மைக்கு மாறானவை. ஊடகங்கள் அதை நம்ப வேண்டாம் எனக் கேட்டுக்கொள்கிறோம். விசிகவை சிறுமைப்படுத்தும் முயற்சிக்கு ஊடகங்கள் உடன்போக வேண்டாம்" என்று தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் 108 இடங்களில் வென்றுள்ள தனிப்பெரும் கட்சியான தமிழக வெற்றிக்கழகம், ஆட்சி அமைப்பதற்கான பணிகளில் மும்முரமாக ஈடுபட்டு வருகிறது. காங்கிரஸ் (5), இந்திய கம்யூனிஸ்ட் (2)மற்றும்மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் (2) கட்சியின் ஆதரவு தவெகவுக்கு கிடைத்துள்ளது.

எனினும் இன்னும் விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் தனது முடிவை அறிவிக்கவில்லை. இதனால் தவெகவுக்கு பெரும்பான்மை கிடைப்பதில் இழுபறி நீடித்து வருகிறது. அவர்தனதுமுடிவை அறிவிக்க இருப்பதாக தெரிவித்துள்ளார். இந்தச் சூழலில் விசிக தரப்பில் இருந்து தமிழகவெற்றிக்கழகத்திடம் துணை முதல்வர் பதவி கேட்பதாக தகவல்கள் வெளியான வண்ணம் உள்ளன.

இன்னொரு புறம் திமுக, அதிமுக இணைந்துதிருமாவளவன் தலைமையில் ஆட்சிஅமைக்கஇருப்பதாக ஒரு தகவலும் சமூக வலைதளங்களில் பரவுகிறது. தற்போது ரவிக்குமார் எம்.பி அளித்துள்ள இந்த விளக்கம் இது போன்ற தகவல்களுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் வகையில் அமைந்துள்ளது.

# "திருமாவளவன் தவெகவுக்கு ஆதரவு அளிக்க வேண்டும்" ராமதாஸ் கோரிக்கை



சென்னை: தமிழகத்தின் நலன் கருதி தமிழக மக்களுக்காகவும், ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும் அரசியல் செய்து வருகின்ற விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் தவெகவுக்கு ஆதரவை அளிக்க வேண்டும் என பாமக நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "2026 தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் 108 இடங்களைப் பிடித்து தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்திருந்தாலும் ஆட்சி அமைக்க தேவையான 118 இடங்கள் கிடைக்காததால் தமிழக ஆளுநர் விஜய்யை ஆட்சி அமைக்க அழைக்கவில்லை. தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் தமிழகத்தில் உள்ள பல கட்சிகளிடம் ஆதரவு நல்கியதில் அதில் அகில இந்திய காங்கிரஸ் கட்சியும், இந்திய கம்யூனிஸ்ட் மற்றும் மார்க்சிய கம்யூனிஸ்ட் அவர்களது ஆதரவு கடிதங்களை கொடுத்துள்ளது. இந்த ஆதரவுகளை கொடுத்தும் தமிழக ஆளுநர் 118 உறுப்பினர்களுக்கான ஆதரவுக் கடிதங்களை கொடுத்தால் தான் ஆட்சி அமைக்க முடியும் என்று திரும்பத் திரும்ப திருப்பி அனுப்புவது ஆளுநர் ஏதோ ஒரு உள்நோக்கத்தில் இருப்பது தெரிகிறது. பின்புலத்தில் இருந்து கொண்டு பாஜக ஆளுநரை இயக்குவதாக பெரும்பான்மையான மக்களால் பேசப்பட்டு வருகிறது. மக்கள் தீர்ப்புக்கு தலை வணங்க வேண்டியது அனைவரின் கடமையாகும். அந்த கடமையை மதித்து தமிழகத்தில்தற்போதுநிலவி வரும் அசாதாரண சூழ்நிலையை மனதில் கொண்டு தமிழகத்தில் தனிப்பெரும் கட்சியாக உள்ள தவெகவை ஆட்சி அமைக்க ஆளுநர் அழைக்க வேண்டும். இதை தாமதப்படுத்தக் கூடாது. உடனே அழைக்க வேண்டும். தமிழக வெற்றிக் கழகத்திற்கு, திராவிட முன்னேற்றக் கழக கூட்டணியில் இருந்து வெற்றி காங்கிரஸ், மார்க்சிய கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட் போன்ற கட்சிகள் தமிழக நலன் கருதி ஆதரவளித்துள்ள நிலையில், தமிழகத்தின் நலன் கருதி தமிழக மக்களுக்காகவும், ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும் அரசியல் செய்து வருகின்ற விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் தமிழக வெற்றிக் கழகத்திற்கு ஆதரவை அளிக்க வேண்டும். அவரது ஆதரவை அளிக்கும் பட்சத்தில் தமிழக ஆளுநர் விஜயை அழைத்து தமிழக முதல்வராக பதவி பிரமாணம் செய்து வைக்க வேண்டும்.

இப்போது உள்ள சூழ்நிலையை மனதில் கொண்டு தம்பி திருமாவளவன் உடனடியாக தமிழக வெற்றிக் கழகத்திற்கு ஆதரவளித்து தமிழக மக்களின் உணர்வுகளை மதித்து தமிழகத்தில் ஆட்சியை ஏற்படுத்தி ஒரு மாற்றத்தை தமிழக மக்கள் இடத்தில் கொண்டு வந்து தமிழக மக்களின் முன்னேற்றத்திற்கு அவர் அளிக்கின்ற ஆதரவைக் கொண்டு அமைய உள்ள தமிழக அரசை சிறப்பாகசெயல்படுத்த ஆலோசனைகள் வழங்கிட வேண்டும் என்பதை வேண்டுகோளாகவைக்கிறேன்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# கோயில் சொத்துகளை பாதுகாக்க வேண்டிய அதிகாரிகள் தவறு இழைக்கக் கூடாது: ஐகோர்ட் நீதிபதி அறிவுரை



சென்னை: கோயில் சொத்துகளை பாதுகாக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் உள்ள அதிகாரிகள் அதில் தவறு இழைக்கக்கூடாது என அறநிலையத்துறைக்கு உயர் நீதிமன்றம் அறிவுரை வழங்கியுள்ளது.

இதுதொடர்பாக திருத்தொண்டர் அறக்கட்டளை தலைவரான சேலம் ஏ.ராதாகிருஷ்ணன், சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவில், 'சென்னை மயிலாப்பூரில் உள்ள கபாலீஸ்வரர் கோயிலில் ஆண்டுதோறும் நடத்தப்படும் அறுபத்து மூவர் உலா மற்றும் பிரம்மோற்சவம் போன்ற திருவிழாக்களின் வரவு - செலவு கணக்கு விவரங்களை இந்துசமய அறநிலையத் துறையின் தணிக்கை பிரிவு அதிகாரிகள் தணிக்கை செய்து அறிக்கை அளித்துள்ளனர்.

அதில் கோயில் நிர்வாகத்தில் பல்வேறு முறைகேடுகள் நடந்துள்ளதாக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளது. இந்த குற்றச்சாட்டுகள் தொடர்பாக பலமுறை புகார் அனுப்பியும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனவே, இதுதொடர்பாக உரிய விசாரணை நடத்த அறநிலையத்துறைக்கு உத்தரவிட வேண்டும்' என கோரியிருந்தார். இந்த வழக்கு நீதிபதி எம்.தண்டபாணி முன்பாக விசாரணைக்கு வந்தது.

அப்போது, மனுதாரரின் புகார் பரிசீலிக்கப்பட்டு சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும், என அறநிலையத்துறை தரப்பில் உறுதியளிக்கப்பட்டது. அதையடுத்து நீதிபதி, "அறநிலையத்துறையின் தணிக்கை குழு கோயில் நிர்வாகத்தில் பல்வேறு முறைகேடுகள் நடந்துள்ளது என குற்றச்சாட்டை சுமத்தியுள்ளது.

அந்த குற்றச்சாட்டுகளின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியது அறநிலையத்துறை ஆணையரது கடமை. குற்றச்சாட்டுகளின் மீது நடவடிக்கை எடுக்காமல் இருப்பது சட்டப்பூர்வ கடமையை துறப்பதற்கு சமம்.

கோயில் சொத்துகளை பாதுகாக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் உள்ள அதிகாரிகள் அதில் தவறு இழைக்கக்கூடாது. எனவே, மனுதாரரின் புகாரை 12 வார காலத்துக்குள் பரிசீலித்து சட்டப்படி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்" என அறிவுறுத்தி, வழக்கை முடித்து வைத்து உத்தரவிட்டுள்ளார்.

# ஐஏஎஸ் அதிகாரியின் விருப்ப ஓய்வில் முறைகேடு: அசல் ஆவணங்களை தாக்கல் செய்ய உத்தரவு



மதுரை: திண்டுக்கல், தேனி மாவட்ட ஆட்சியராக இருந்த ஐஏஎஸ் அதிகாரி வெங்கடாச்சலத்தின் விருப்ப ஓய்வு ஆவணங்களை தாக்கல் செய்ய உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொடைக்கானலைச் சேர்ந்த கோபாலகிருஷ்ணன், உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு: திண்டுக்கல், தேனி மாவட்ட முன்னாள் ஆட்சியர் வெங்கடாச்சலம்.

இவர் 2012 பிப்.29 முதல் 2018 பிப்.24 வரை ஆட்சியராக இருந்த காலத்தில் வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக லஞ்ச ஒழிப்புத் துறைக்கு புகார் அனுப்பினேன்.

புகாரின் பேரில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில், வெங்கடாச்சலத்துக்கு முறைகேடாக விருப்ப ஓய்வு வழங்கிய அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கவும், சொத்து குவிப்பு புகார் தொடர்பாக சிபிஐ விசாரிக்கவும் உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு கூறப்பட்டிருந்தது.

மனுவை நீதிபதி பி.புகழேந்தி மீண்டும் விசாரித்தார். வெங்கடாச்சலம் விருப்ப ஓய்வு தொடர்பான அசல் ஆவணங்களை தாக்கல் செய்ய அரசு தரப்பில் அவகாசம் வேண்டும் என்றும், அந்த ஆவணங்களை முதல்வரிடம் அனுமதி பெற்ற பிறகே நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும் என்றும் கூறப்பட்டது.

இதையடுத்து நீதிபதி, 'ஐஏஎஸ் அதிகாரிக்கு விருப்ப ஓய்வு வழங்கியதில் தேவையான விதிகள் பின்பற்றப்பட்டதா, இல்லையா என்பதை உறுதி செய்வதற்காகவே அந்த ஆவணங்களை தாக்கல் செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதனால், அந்த ஆவணங்களை ஒரு வாரத்தில் தாக்கல் செய்ய வேண்டும். இந்த வழக்கில் அனைத்து தரப்பு வாதங்களும் விரிவாக கேட்கப்பட்டுள்ளதால் தீர்ப்பு தள்ளி வைக்கப்படுகிறது என நீதிபதி உத்தரவிட்டார்.

# மயிலாடுதுறை ஆர்ப்பாட்டத்தில் காங்கிரஸ், திமுகவினர் தகராறு



மயிலாடுதுறை: தவெக-வை ஆட்சி அமைக்க அழைக்காத தமிழக ஆளுநரைக் கண்டித்து மயிலாடுதுறையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது காங்கிரஸ் - திமுகவினரிடையே ஏற்பட்ட மோதல் சம்பவத்தால் பரபரப்பு ஏற்பட்டது.

தவெகவை ஆட்சி அமைக்க அழைக்காத தமிழக ஆளுநரை கண்டித்து மயிலாடுதுறை கிட்டப்பா அங்காடி முன்பு காங்கிரஸ் கட்சி சார்பில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் காங்கிரஸ் மாவட்டத் தலைவர் பானு சேகர் தலைமையில் கட்சி நிர்வாகிகள் 50-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். பின்னர் அங்கிருந்து அனைவரும் கலைந்துசென்று கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு வந்த திமுக மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் மருது, முன்னாள் கவுன்சிலர் ரகு உள்ளிட்ட திமுகவினர், தங்கள் கூட்டணியில் இருந்து விலகி தவெகவுக்கு ஆதரவு அளித்ததை கண்டித்து காங்கிரஸ் கட்சியினருக்கு எதிராக கடுமையாக விமர்சித்தனர். மேலும், காங்கிரஸ் வட்டாரத் தலைவர் ராஜாவை பிடித்து தள்ளியதில் அவர் தடுமாறி கீழே விழுந்தார். பின்னர், காங்கிரஸ் கொடிகளை கிழித்து சாலையில் போட்டு ராகுல் காந்திக்கு எதிராக முழக்கமிட்டனர். அப்போது, "திமுகவுக்கு துரோகம் செய்த நீங்கள் எல்லாம் ஆளுநரை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்துவதா" என அவர்களை நோக்கி கேள்வி எழுப்பினர். இதனால் அங்கு சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. காங்கிரஸ் எம்எல்ஏக்கள் தவெகவுக்கு ஆதரவு அளித்ததைத் தொடர்ந்து, மயிலாடுதுறை தொகுதியில் இருந்து வெற்றி பெற்ற காங்கிரஸ் எம்எல்ஏ ஜமால் முகமது யூனுஸ், எம்.பி. சுதா ஆகியோரை திமுக தொண்டர் கணேசமூர்த்தி என்பவர் செல்போனில் தொடர்பு கொண்டுபேசிய ஆடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

# "இத்தனை ஆண்டுகளில் பார்க்காத குதிரை பேரம்" தவெக மீது திமுக எம்.பி வில்சன் குற்றச்சாட்டு



சென்னை: இத்தனை ஆண்டுகளில் இல்லாத குதிரை பேர முயற்சிகளைத் தமிழ்நாடு இப்போதுதான் பார்க்கிறது என திமுக எம்.பி. வில்சன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ள அவர், "தமிழக அரசியலில் 'மாற்றம்' கொண்டு வரப்போவதாக அவர்கள் சொன்னதன் அர்த்தம் இப்போதுதான் எனக்குப் புரிகிறது. இத்தனை ஆண்டுகளில் இல்லாத குதிரை பேர முயற்சிகளைத் தமிழ்நாடு இப்போதுதான் பார்க்கிறது. இத்தனையும் பதவியேற்பதற்கு முன்பே நடக்கிறது" என்று தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் 108 இடங்களில் வென்றுள்ள தனிப்பெரும் கட்சியான தமிழக வெற்றிக் கழகம் (தவெக), ஆட்சி அமைப்பதற்கான பணிகளில் மும்முரமாக ஈடுபட்டு வருகிறது. காங்கிரஸ் (5), இந்திய கம்யூனிஸ்ட் (2) மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் (2) கட்சியின் ஆதரவு தவெக-வுக்கு கிடைத்துள்ளது. இந்நிலையில், வெள்ளிக்கிழமை அன்று ஆளுநர் அர்லேகரை நேரில் சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோரினார் தவெக தலைவர் விஜய்.

இந்தச் சூழலில் தவெக மீது பரபரப்பு குற்றச்சாட்டை முன்வைத்தார் டிடிவி தினகரன்., தேர்தலில் ஒரே ஒரு தொகுதியில் வென்றுள்ள தங்கள் கட்சியின் எம்எல்ஏவான காமராஜ், அதிமுகவை ஆதரிப்பதாக ஆளுநர் அர்லேகரிடம் கடிதம் வழங்கினார்.

பின்னர், தங்கள் கட்சியின் எம்எல்ஏ-வை தன்னால் தொடர்புகொள்ள முடியவில்லை என்றும், அவரைக் காணவில்லை என்றும், குதிரை பேரத்தில் தவெக ஈடுபட்டுள்ளதாகவும் டிடிவி தினகரன் குற்றம்சாட்டினார்.

இதைத் தொடர்ந்து நள்ளிரவு சுமார் 12 மணி அளவில் ஆளுநர் மாளிகைக்கு வந்தார் அமமுக எம்எல்ஏ காமராஜ். தொடர்ந்து டிடிவி தினகரனும் அங்கு வந்திருந்தார்.

அப்போது பேசிய அமமுக எம்எல்ஏ காமராஜ், "நான் புதுச்சேரியில் தங்கி இருந்தேன். எனது மொபைல் எண்ணுக்கு மாலை 6 மணி அளவில் ஆளுநர் மாளிகையில் இருந்து அழைப்பு வந்தது. உடனடியாக இது தொடர்பாக வழக்கறிஞரிடம் பேசி, என்ன செய்யலாம் என முடிவு செய்தோம். நான் தவெகவுக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை.

அந்தக் கடிதம் வாட்ஸ்அப்பில் வந்துள்ளது. நான் பயன்படுத்துவது வாட்ஸ்அப் வசதி இல்லாத போன். அதனால் எங்கள் கட்சியின் பொதுச் செயலாளர் இந்த விவரம் தெரிய வந்ததும் ஆளுநர் மாளிகைக்கு நேரில் வருகை தந்து விவரத்தை தெரிவித்தார்" என்று தெரிவித்தார்.

இதனையடுத்து காமராஜ் தனது கைப்பட கடிதம் எழுதும் வீடியோ சமூக வலைதளங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# "9 போர்களை தடுத்து நிறுத்தியுள்ளேன்" அமெரிக்க அதிபர் ட்ரம்ப் பெருமிதம்



வாஷிங்டன்: ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையே மூன்று நாட்களுக்கு தற்காலிக போர்நிறுத்தம் அமலுக்கு வந்துள்ள நிலையில், இந்த மோதலை நிரந்தரமாக முடிவுக்குக் கொண்டுவந்து, தான் தீர்த்து வைத்த பத்தாவது போராக இதை மாற்ற விரும்புவதாக அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.


வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்தத் தற்காலிக அமைதி நீண்ட காலப் போர்நிறுத்தத்துக்கான தொடக்கமாக அமையும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

இரண்டாம் உலகப் போரில் சோவியத் யூனியனின் வெற்றியை நினைவுகூரும் வகையில் ரஷ்யாவில் கொண்டாடப்படும் வெற்றி தினத்தை முன்னிட்டு, மே 9, 10 மற்றும் 11 ஆகிய மூன்று நாட்களுக்குப் போர்நிறுத்தம் செய்ய இரு நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளன.

இந்தப் போரில் உக்ரைனுக்கும் முக்கியப் பங்கு இருந்ததைச் சுட்டிக்காட்டிய ட்ரம்ப், தனது நேரடி வேண்டுகோளை ஏற்று ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் மற்றும் உக்ரைன் அதிபர் ஜெலென்ஸ்கி ஆகியோர் இதற்கு சம்மதம் தெரிவித்துள்ளதாக கூறினார்.

இந்த மூன்று நாள் போர்நிறுத்தத்தின் ஒரு பகுதியாக, இரு நாடுகளும் தலா 1,000 கைதிகளைப் பரிமாறிக் கொள்ளவும் உடன்பாடு ஏற்பட்டுள்ளது. உக்ரைன் போர் குறித்து கவலை தெரிவித்த ட்ரம்ப், "இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு மனித உயிரிழப்புகள் அதிகம் ஏற்பட்ட மிக மோசமான போர் இது. இந்தப் போரில் மாதந்தோறும் ஆயிரக்கணக்கில் இளம் வீரர்கள் கொல்லப்படுகின்றனர். நான் ஏற்கனவே எட்டு அல்லது ஒன்பது போர்களைத் தீர்த்து வைத்துள்ளேன். இந்தப் போரை நான் முடிவுக்குக் கொண்டுவரும் பத்தாவது போராகப் பார்க்க விரும்புகிறேன்" என்று ட்ரம்ப் கூறினார். இந்த மூன்று நாள் போர்நிறுத்தத்தை மேலும் நீட்டிக்க தான் விரும்புவதாகவும், போரை நிரந்தரமாக முடிவுக்கு கொண்டுவருவதற்கான பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# தமிழக மின்வாரிய ஒப்பந்த தொழிலாளர்கள் பணி நிரந்தரம்: ஐகோர்ட் உத்தரவு



மதுரை: மின்வாரிய ஒப்பந்த தொழிலாளர்களை பணிநிரந்தரம் செய்யும் தொழிலாளர் ஆய்வாளரின் உத்தரவுக்கு எதிராக மின்வாரியம் தாக்கல் செய்த மேல்முறையீடு மனுக்களை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிட்டது. நீதிமன்றத்தின் இந்த உத்தரவால் தொழிலாளர் ஆய்வாளர் வழங்கிய பணிநிரந்தர ஆணைகள் உறுதி செய்யப்பட்டுள்ளன. மதுரை, தேனி, தூத்துக்குடி, விருதுநகர், திண்டுக்கல் உள்ளிட்ட மாவட்டங்களில் மின்சார வாரியத்தில் குழி தோண்டுதல், மின்கம்பிகள் அமைத்தல், பழுது நீக்குதல் உள்ளிட்ட அத்தியாவசியப் பணிகளில் 1998 முதல் 2014 வரை ஈடுபடுத்தப்பட்ட ஒப்பந்தத் தொழிலாளர்கள் பணிநிரந்தரம் கோரி தொழிலாளர் ஆய்வாளரிடம் மனு அளித்தனர். இதை விசாரித்த தொழிலாளர் ஆய்வாளர், ஒப்பந்தத் தொழிலாளர்கள் மின்வாரியத்தில் 24 மாதங்களில் 480 நாட்கள் தொடர்ந்து பணியாற்றி இருப்பதால் அவர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என உத்தரவிட்டது.

இதை எதிர்த்து, மின்வாரியம் சார்பில் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மேல்முறையீடு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. மனுக்களை நீதிபதி பி.புகழேந்தி விசாரித்தார். மின்சார வாரியம் சார்பில், ஒப்பந்தத் தொழிலாளர்கள் நேரடியாக வாரியத்தால் பணியமர்த்தப்படவில்லை.

அவர்கள் ஒப்பந்ததாரர்கள் மூலமே நியமிக்கப்பட்டனர். பணிநிரந்தரம் கோரும் தொழிலாளர்கள் தொழிலாளர் நீதிமன்றத்தை தான் அணுக வேண்டும். தொழிலாளர் ஆய்வாளருக்கு இதற்கு அதிகாரம் இல்லை. இவர்கள் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டதால் இவர்களுக்கு பணிநிரந்தரச் சட்டம் பொருந்தாது என தெரிவிக்கப்பட்டது. பின்னர் நீதிபதி பிறப்பித்த உத்தரவு: பணிநிரந்தரச் சட்டத்தின் படி, ஒரு தொழிலாளர் 480 நாட்கள் பணியாற்றினாரா என்பதை ஆய்வு செய்து, அவருக்குப் பணி நிரந்தரம் வழங்கத் தொழிலாளர் ஆய்வாளருக்கு முழு அதிகாரம் உண்டு.

தொழிலாளர்கள் மேற்கொண்ட குழி தோண்டுதல், மின் கம்பம் நடுதல் உள்ளிட்ட பணிகள் கட்டுமானப்பணிகள் அல்ல, அவை மின்வாரியத்தின் நிரந்தரமான மற்றும் அத்தியாவசியப் பணிகள் ஆகும். ஏற்கெனவே இதே போன்ற சூழலில் இருந்த ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்ற உத்தரவுப்படி பணிநிரந்தரம் வழங்கப்பட்டது. இந்தத் தொழிலாளர்களுக்கும் அதே பலனை வழங்குவது அவசியமானது என தெரிவித்து, மேல்முறையீட்டு மனுக்கள் தள்ளுபடி செய்யப்படுகின்றன. தொழிலாளர் ஆய்வாளர் வழங்கிய பணிநிரந்தர ஆணைகள் உறுதி செய்யப்படுகின்றன. இவ்வாறு நீதிபதி உத்தரவில் குறிப்பிட்டுள்ளார்.

# விஜய் முதல்வராவதை தடுக்கக் கூடாது: ஆளுநர் மாளிகை முன்பு தவெகவினர் போராட்டம்



சென்னை: தவெக தலைவர் விஜய் ஆட்சி அமைக்க அழைப்பு விடுக்காத ஆளுநரை கண்டித்து, தவெக தொ ண்டர்கள் ஆளுநர் மாளிகை முன்பு போராட் டத்தில் ஈடுபட்டனர்.

நடந்து முடிந்த தமிழக சட்ட ப் பேரவைத் தேர் தலில் விஜய்யின் தவெக 108 இட ங் களை கைப் பற்றி தனிப்பெரும் கட்சி யாக உ ருவெடுத் தது. இரு ப் பினும் ஆட்சி அமைக்க தே வை யான 118 எம்எ ல்ஏக்கள் இல் லை.

இதனால், தவெகவால் ஆட்சி அமைக்க முடி யாத சூழ்நிலை நில வியது. இந்நிலையில், திமுக கூட் ட ணியில் இருந்துவிலகிகாங்கிரஸ் தவெக வுக்கு ஆதரவு தெரிவித்தது.

அக்கட்சிக்கு 5 எம்எல் ஏ க் கள் உள்ளதால் தவெக எம்எல்ஏக்களின் பலம் 113 ஆக உயர்ந்தது. இதைத்தொடர்ந்துவிஜய் தமி ழ க ஆ ளு ந ரை இரண்டு முறை சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோரினார்.

மேலும்,பதவி ஏற்புக்கு பின் சட்டப்பேரவையில் பெ ரும் பான்மையை நிரூபி ப்பதாக கூறினார். ஆ னால், ஆ ளு நர் இது வரை யில் விஜய்யை ஆட்சி அமைக்க அழைக் க வில்லை. மேலும், தி முகவும், அதிமுகவும் கூட் டணி அமைத்து ஆ ட்சி பொறு ப்புக்கு வர உ ள்ளதாக சமூக வலை தளங் களில் தகவல் பர-வி ய து . இந்நிலையில், வி ஜ ய்யை ஆட்சி அமைக்க அழைப்பு விடுக் காத ஆளுநரை கண்டித்துதவெகதொண் ட ர் ஒருவர் ஆளுநர் மா ளிகை முன்பு நேற்று சங்கு ஊதி போராட்டத் தில் ஈடுபட்டார்.

விஜய்முதல்வராவதை தடுக்காதே,மறுக்காதே... மறு க் காதே... மக்கள் தீ ர்ப்பை மறு க்காதே, தடுக்காதே... தடுக்காதே விஜ ய் முத ல்வ ராவதை த டுக் காதே என சங்கு ஊதி ஆக்ரோஷமாக முழக்கமிட்டார்.

இ தை ய டு த் து, அங் கி ரு ந்த போலீஸார் அவ ரை கைது செய்து அழை த் துச் சென்றனர். இதையடுத்து, விஜய்யை ஆட்சி அமைக்க ஆளுநர் அழைப்பு விடுக்க கோரி தவெ க தொண்டர் ஒரு வ ர் ஆ ளுநர் மாளிகை மு ன்பு காலவரையற்ற உண்ணாவிரதம் மேற் கொள்ள முயன்றார். அவரை போலீஸார் கைது செ ய்து அப்புறப் படுத்தினர்.

இது ஒருபுறம் இருக்க வி ஜய்க்கு முதல்வராக ப த விப் பி ரமாணம் செய்து வை க்க வலி யு றுத்தி கையில் பதா-கையை ஏந்தி தவெக தொ ண் டர் ஒருவர் போ ரா ட்டத்தில் ஈடுபட் டார்.

மேலும், ஒரு பெண், ஆளுநர் மாளிகை முன்பு வந்து, நாடே அழுகிறது... விஜய் முதல்வராக வர வேண்டும் என கோஷ-மிட்டவாறு தவெக கொடி யு ட ன் போராட்டத்தில் ஈடுபட்டார். இதுபோன்ற நி கழ்வுக ளா ல் ஆளுநர் மாளிகைபகுதியில் பரப-ரப்பு ஏற்பட்டது.

# “கேரள முதல்வர் குறித்து காங்கிரஸ் தலைமை முடிவெடுக்கும்” கே.முரளிதரன் பேட்டி



தி ருவனந்தபுரம்: கேர-ளாவின் அடுத்த முதல்-வர் யார் என்பது குறித்த ஆலோசனைகள் 24 மணி நேரத்துக்குள் நிறைவடையும் என்ற தகவல் டெல்லியில் இருந்து வந்துள்ளதாக மூத்த காங்கிரஸ் தலை-வர்கே.முரளிதரன்தெரி-வித்துள்ளார்.

நடந்து முடிந்த சட்டப்-பேரவைத் தேர்தலில் மொத்தமுள்ள 140 தொகுதிகளில், காங்கி-ரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்-னணி (யுடிஎஃப்) 102 இடங்களைக் கைப்பற்றி ஆட்சி அமைக்கும் தகு-தியைப் பெற்றுள்ளது. இதில், காங்கிரஸ் மட்-டுமே 63 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. இதையடுத்து, கேரளா-வின் அடுத்த முதல்வரை தேர்வு செய்வதற்கான முயற்சிகளை காங்கிரஸ் கட்சிதீவிரப்படுத்தி உள்-ளது.

காங்கிரஸ் கட்சியின் மேலிட பார்வையாளர்-களான அஜய் மக்கான் மற்றும் முகுல் வாஸ்னிக் ஆகியோர் கடந்த 7-ம் தேதிதிருவனந்தபுரத்தில் காங்கிரஸ் எம்எல்ஏக்க-ளின் கூட்டத்தைக் கூட்டி ஆலோசனை நடத்தினர். இதில், யாரை முதல்வ-ராக தேர்ந்தெடுப்பது என்பது குறித்து எம்எல்-ஏக்களின் கருத்துகளை அவர்கள் கேட்டறிந்-தனர்.

இது தொடர்பாக டெல்-லியில் நேற்று செய்தியா-ளர்களிடம் பேசிய அஜய் மக்கான், "காங்கிரஸ் எம்எல்ஏக்களின் கூட்-டத்தை நாங்கள் மே 7-ம் தேதி கூட்டினோம். ஒவ்வொரு எம்எல்ஏவி-டமும் நாங்கள் தனித்த-னியாகப் பேசினோம். கட்சியின் சட்டப்பேர-வைக் குழு தலைவர் தொடர்பான அவர்களின் கருத்துக்களைக் கேட்-டோம். அவர்கள் கூறிய மற்ற கருத்துகளையும் நாங்கள் குறித்துக்கொ ண்டோம்.

இதையடுத்து, காங்கி-ரஸ் சட்டப்பேரவைத் தலைவரை தேர்வு செய்-வதற்கான முழு அதிகா-ரத்தையும் காங்கிரஸ் தலைமைக்கு அளிக்கும் ஒருவரி தீர்மானத்தை அனைத்து எம்எல்ஏக்க-ளும் ஒன்றிணைந்து ஒ ரு ம ன த ா க நிறைவேற்றினர். அந்த தீர்மானத்தின் நகல் கட்-சித் தலைவர் தலைமை-யிலான மேலிடத்திடம் ஒப்படைக்கப்பட்டது. மேலும், எம்எல்ஏக்கள் தெரிவித்த கருத்துகள் தொடர்பான அறிக்கை-யையும் நாங்கள் மேலி-டத்திடம் சமர்ப்பித்-துள்ளோம். காங்கிரஸ் மேலிடம் விரைவில் தனது முடிவை அறிவிக்-கும் என தெரிவித்தி-ருந்தார்.

இந்நிலையில், செய்தி-யாளர்களிடம் பேசிய காங்கிரஸ் மூத்த தலை-வர் கே.முரளிதரன், "முதல்வர் குறித்த ஆலோசனை 24 மணி நேரத்துக்குள் நிறைவ-டையும் என்ற தகவல் டெல்லியில் இருந்து வந்-துள்ளது. முதல்வரை தேர்வு செய்வதில், சீனி-யாரிட்டி மட்டுமே ஒரே அளவுகோலாக இருக்-காது. அமைய இருப்பது கூட்டணி அரசு. எனவே, கூட்டணிக் கட்சிகளின் கருத்துகளையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்" என தெரி-வித்துள்ளார்.

முதல்வர் பதவிக்கு வி.டி.சதீசன், ரமேஷ் சென்னிதாலா, கே.சி. வேணுகோபால், சன்னி ஜோசப் ஆகியோர் இடையே கடும் போட்டி நிலவுகிறது. அதேநேரத்-தில்,வி.டி.சதீசனின் ஆத-ரவாளர்கள், அவரையே முதல்வர் வேட்பாளராக தேர்ந்தெடுக்க வேண்-டும் என்பதை வலியு-றுத்தி கேரளாவின் பல்-வேறு பகுதிகளில் பேரணிகளை நடத்தி வருகின்றனர். மேலும், பல்வேறு இடங்களில் பதாகைகளை வைத்து தங்கள் கோரிக்கையை வலியுறுத்தி வருகின்ற-னர் என்பது குறிப்பிட த்-தக்கது.

# மருத்துவர் கனவை நிறைவேற்ற 71 வயதில் நீட் தேர்வு எழுதிய முதியவர்



லக்னோ: உத்தர பிர-தேசம் லக்னோவில் 71 வயது முதியவர் ஒருவர் நீட் தேர்வுக்கு விண்ணப் பித்து தேர்வு எழுதியுள் ளார். உத்தர பி ரதேசம் லக்னோவைச் சேர்ந் தவர் அசோக்பாஹர்(71). உத் தராகண் டில் உள்ள இந் திய மருந்துள் நிறு வ னத்தி ல் (ஐடிபிஎல்) மார்க் கெட்டிங் பிரிவு த லை வராகவும், வெளி யுறவுத்துறையில் ஆலோ ச க ராகவும் பணியாற்றி வி ருப்ப ஓய்வு பெற்றுள் ளார். இ வரது மனைவி டா க் டர். மஞ்சு பாஹர் மகப்பேறு மருத்துவர்.

அசோக் பாஹரின் தந் தை யும் லக்னோவில் பிர ப ல மரு த்து வராக இரு ந் தவர் . அதனால் இவ ரும் ம ருத் துவராக வே ண் டு ம் என இவரது தாய் விரு ம்பியுள்ளார். ஆனால், மருத்துவக் கல் லூ ரி நுழைவுத் தேர்வு களில் இவரால் வெற்றி பெ ற முடியவில்லை. இவரது கு டு ம்ப உறுப் பினர்கள் மற்றும் உறவி-னர் கள் சுமார் 20 பேர் மருத்துவர்களாக உள் ள னர். பலர் வெளிநாடு க ளி ல் பணியாற்றுகின் ற ன ர். அதனால் தனது ம ருத்துவர் கனவை நிறைவேற்ற 71 வயதில் நீ ட் தேர்வு எழுதியுள் ளார் அசோக் பா ஹர். இ வர் மருத் துவராகி ஹெ படா லஜி படிப்பை முடித்து கல்லீரல் நோய் நி புண ராக வேண்டும் எ ன வி ரும்புகிறார். 71 வயதில் இவர் நீட் தேர்வு எ ழு தும் செய்தி சமூக ஊட கங்களில் வேகமாக ப ரவி யது. பலர் இவரது முயற் சியை ஊக்குவித் தாலும், சிலர் இந்த வய-தில் மருத்துவப் படிப்பது வீண், காலம் கடந்த செயல் என்றும் மற்றொ-ருவரின் மருத்துவர் சீட் வா ய்ப்பை கெ டுப் பது போ ன் றது எ னவும் தங் கள் கருத்துக்களை பதிவு செய்துள்ளனர்.

# கேரள கிராமத்தில் 2,000 குடும்பங்களில் 550 இரட்டையர்கள்



தி ருவன ந்தபுரம்: கே ரளா வின் மலப்புரம் மாவட் டத்தி ல் கோடினி கிராமம் உள்ளது. அங்கு சுமார் 2,000 குடும்பங்கள் வ சிக் கின்றன . பெரும் பாலும் ஒவ்வொரு குடும் ப த்திலும் இரட்டையர்-க ள் உ ள்ளனர். இதன் கா ர ண மாக கோடினி கி ரா மம், இரட்டையர் கி ரா மம் என்று அழைக் கப்படுகிறது.

இதுகுறித்து கிராம மக் கள் கூறியதாவது: கடந்த 70 ஆண்டுகளாக எங்கள் கிராமத்தில் இரட்டைக் கு ழந் தைகள் பிறப்பது வழக்கமாக இருந்து வரு கி றது. இரு குழந் தைகளும் ஒரே மாதிரி-யா க இருப்பதால் அவர் க ளை அடை யாளம் கா ண்பதில் பெரும் சிர-ம ங்க ள் ஏற்படும். தற் போதைய சூ ழலில் எங் கள் கிராமத்தில் 550 பேர் இர ட்டைய ர்களாக உள் ளனர்.

எங் கள் கிராமத்தைச் சேர்ந்த பெண் கள் திரு மணமாகி வெளியூர்க-ளு க்கு செ ல் கின்றனர். அவர் களுக்கு பிறக்கும் குழ ந்தைகளும் பெரும் பாலும் இ ரட்டையர் களாகஉள்ளனர்.இதற்கு மரபணு காரணமாக இருக்கலா ம். இவ்வாறு கிரா ம மக்கள் தெரிவித் தனர்.சமூகஆர்வலர்கள் கூ றிய தாவது : கோடினி கிராமம் குறித்து இந்திய ஆய்வு நிறுவனங்கள் மற் றும் வெளிநாட்டு நிறு வனங்கள் பல்வேறு ஆய் வுகளை நடத்தி உள்ளன.

கி ரா ம த் தின் குடிநீர், மக்களின் உணவு பழக்க வ ழக் கம், சுற்றுச்சூழல் ஆகியவை குறித்து இந்த நி று வன ங் கள் ஆய்வு நடத்தி உள்ளன. நைஜீரி யா வின் இக்போ-ஓரா ச மு தாய த்தில் இரட்-டைக் குழந்தைகள் பிறப் பது வழக்கமாக உள்ளது. இதற்கு சில உணவு வ கைகள் காரணம் என்று விஞ்ஞானிகள் கண்டு பிடித்து உள்ள-னர்.

ஆனால்கோடினிகிரா-மத் தைப் பொறுத்தவரை உண வு வகைகளு க்கும் இரட்டைக் குழந்தைகள் பி ற ப்புக் கும் தொடர்-பில்லை என்பது தெரிய வ ந்துள்ளது. கிராம மக் க ளி ன் மரபணு தொடர் பா கவும் விஞ்ஞானிகள் ஆய்வு நடத்தி உள்ளனர். ஆனால் இதிலும் பெரிய முன்னேற்றம் ஏற்படவில் லை. இத ர கேரள ம க் களை ப் போன்றே கோ டினி கிராம மக் களின் மரபணுவும் இருக் கிற து. இரட்டைக் குழந் தை கள் விவகாரம் தொட ர் பாக தொடர்ந்து ஆய்வு நடத்தப்பட்டு வரு கி றது. இவ் வாறு அவர் கள் தெரிவித்துள்ளனர்.

# திண்டுக்கல்லில் சாகும் வரை உண்ணாவிரதம் தொடங்கிய தவெக ஆதரவு பெண்கள்: இருவர் கைது



திண்டுக்கல்: தவெக தலைவர் விஜய்க்கு முதல்வராக பதவியேற்பு நடத்த வலியுறுத்தி, திண்டுக்கல்லில் பெண்-கள் கையில் பதாகை ஏந்தி சாகும் வரை உண்-ணாவிரதப் போராடத்-தில் ஈடுபட்டனர்.

இவர்களை போலீ-ஸார் கைது செய்தனர். திண்டுக்கல் தெற்குரத-வீதி, எருமைக்காரத் தெருவை சேர்ந்தவர் சரண்யா.

இவர் தவெக செயற்-குழு உறுப்பினராக உள்ளார். இவர், நேற்று காலை திடீரென திண்-டுக்கல்லில் திருச்சி, பழநி ரோடு சந்திப்பு கல்லறைத்தோட்டம் அருகே சாகும் வரை உண்ணாவிரதம் என்ற பதாகையை ஏந்தி, கழுத்தில் தவெக துண்டு அணிந்து அமர்ந்தார்.

இவருடன் இவரது தோழி வளர்மதி, வளர்-மதியின் 15 வயது மகள் ஆகியோரும் கையில் பதாகையை ஏந்தி அமர்ந்தனர்.

ஜனநாயக முறைப்படி, தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய்யை ஆட்சி அமைக்க ஆளுநர் உடனடியாக அழைக்க வேண்டும். சட்டமன்-றத்தில் பெரும்பான்-மையை நிரூபிக்க 15 நாட்கள் கால அவகாசம் வ ழ ங் க வே ண் டு ம் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி சாகும்-வரை உண்ணாவிரதம் இருப்பதாக தெரிவித்-தனர்.

தகவல் அறிந்த திண்-டுக்கல் டிஎஸ்பி கார்த்-திக், உண்ணாவிரதத்தை துவக்கிய சரண்யாவி-டம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

அ னு ம தி யி ன் றி செயல்பட்டுள்ளீர்கள். அரசியல் அமைப்பு சட்-டப்படி ஆளுனர் செயல்-படுவார் என உண்ணா-விதரம் இருந்தவர்க ளிடம் போலீஸார் விளக்கிபேச்சுவார்த்தை நடத்தினர். இருந்தபோ-தும் உண்ணாவிரதத்தை கைவிட பெண்கள் மறுத்தனர். இதைய-டுத்து சரண்யா, வளர்-மதி ஆகிய இருவரையும் விசாரணைக்காக திண்-டுக்கல் நகர் வடக்கு காவல்நிலையத்திற்கு

போலீஸார் அழைத்-துச்சென்று கைது செய்-தனர். தவெக தலைவர் விஜய்க்கு பதவிப்பிரமா-ணம் செய்ய வலியுறுத்தி பெண்கள் திடீரென சாகும்வரை உண்ணா-வி ர த த் தை திண்டுக்கல்லில் துவக்-கியதால் பரபரப்பு ஏற்-பட்டது. தகவல் அறிந்து தவெக கட்சியை சேர்ந்த நிர்வாகிகள் வரும்முன் போலீஸார் இரு பெண்-களையும் உண்ணாவிர-தம் இருந்த பகுதியில் இருந்து அப்புறப்ப-டுத்தினர்.

# Unity cannot be forced: Madras HC allows village temple drama in Tamil Nadu



Madras High Court allows Sivagangai temple drama, saying unity cannot be forced amid caste tensions and rival group disputes over festival control.

The Madras High Court said "unity cannot be forced," allowing a plea to conduct a village temple drama in Tamil Nadu's Sivagangai district, despite objections from the State over caste tensions and a dispute between rival groups over temple celebrations.

Justice S. Srimathy on Thursday observed that even human beings belonged to the "animal kingdom" and that divisions arise naturally beyond a certain point. The court held that authorities cannot prevent separate celebrations merely because communities refuse to unite.

The court was hearing a petition filed by S. Sukumar seeking directions to police and district authorities to grant permission and protection for conducting the Arulmigu Sri Pon Muniyandi Temple festival and staging a "Valli Thirumana Drama" in Sivagangai district on May 22. The Tamil Nadu government opposed the plea, arguing that rival groups were claiming rights over the festival and drama performance, leading to continued tensions in the village. It also informed the court that a village peace committee had already discussed the issue and recommended that the drama not be held. The petitioner, however, contended that the performance would be staged on private property near the temple, with the landowner's consent, and not on temple premises. He argued that the peace committee's decision applied only to temple land and could not restrict an event on private property.

The petitioner also cited a previous judgment of the High Court from November 2023, where it had adjudicated a similar dispute and held that any particular community could not be prevented from celebrating despite opposition from other communities.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.